www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# Aadhavaa Publications

## சமூக அறிவியல்

## மாதிரி வினாத்தாள் - 4

## பத்தாம் வகுப்பு

கால அளவு : 15 நிமிடம் + 3 மணி மதிப்பெண்கள்: 100

---

பகுதி-1

அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x1=14

1. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா

2. தமிழ்நாட்டின் மிக அதிக மழை பெறும் பகுதி எது?
அ) களக்காடு ஆ) ஒகேனக்கல்
இ) சின்னகக்கல்லார் ஈ) கிளியூர்

3. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி …………
அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

4. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?
அ) செப்டம்பர் 2,1945 ஆ) அக்டோபர் 2, 1945
இ) ஆகஸ்டு 15, 1945 ஈ) அக்டோபர் 12, 1945

5. GST பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
i. GST ‘ஒரு முனைவரி’
ii. இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
iii. இது ஜுலை 1,2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது
iv. இது இந்தியாவில் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்.
அ) i. மற்றும் ii. சரி ஆ) ii. iii. மற்றும் iv. சரி
இ) i., iii. மற்றும் iv. சரி ஈ) மேற்கூறிய அனைத்தும் சரியானவை

6. கூற்று: புதிய விதிமுறைகளின்படி தோலினால் ஆன இலட்சினை வைக்கப்பட்ட புதிய வகை தலைப்பாகை ஆட்சேபணைக்குரிய செயலாகக் கருதப்பட்டது.
காரணம்: இலட்சினை விலங்குத் தோலினால் ஆனது.
அ) கூற்று தவறு காரணம் சரி
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி
இ) கூற்றும் மற்றும் காரணம் ஆகிய இரண்டும் தவறு.
ஈ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. எனினும் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

7. காங்கிரஸ் சைமன் குழுவை புறக்கணித்த காரணம்.
1. அது வெள்ளையர்களை மட்டுமே கொண்டிருந்தது.
2. அக்குழுவில் ஒரு இந்தியர் கூட இடம்பெறவில்லை.
3. அது சட்டப்பூர்வ ஆணையாகும்.
4. அது 1919 ஆம் ஆண்டுச் சட்டத்தின் செயல்பாடுகளைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டது.
அ) 1. மற்றும் 2. ஆ) 3. மற்றும் 4.
இ) 1. மற்றும் 3. ஈ) 2. மற்றும் 4.

8. இந்தியாவில் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கியவர்……………………..
அ) அன்னிபெசன்ட் ஆ) விவேகானந்தர் இ) நாராயணகுரு ஈ) M. G. ராணடே

9. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480 ஐ கொண்டு வந்த நாடு ……………
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) சிங்கப்பூர் ஈ) இங்கிலாந்து

10. இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலம்..........
அ) குஜராத் ஆ) சிக்கிம் இ) உத்திரப் பிரதேசம் ஈ) தமிழ்நாடு

11. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்:
அ) காதர் ஆ) பாங்கர் இ) வண்டல் மண் ஈ) கரிசல் மண்

AADHAVAA PUBLICATIONS 9092109966 www.Padasalai.Net

For Orders Plz Contact : 90921 09966

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

12. **அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும் ?**
    அ) உச்சநீதி மன்றம் விரும்பினால்
    ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்
    இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசுத் தலைவரின் ஆணையினால்
    ஈ) மேற்கண்ட அனைத்தும்
13. **முக்கூட்டு ஒப்பந்தமாக சபஹார் ஒப்பந்தம் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ..........ஆகிய நாடுகளுக்கு இடையே கையெழுத்தானது.**
    அ) ஈராக் ஆ) ஈரான் இ) பாகிஸ்தான் ஈ) நேபாளம்
14. **கீழ்க்கண்டவற்றுள் மண் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மாவட்டம் .........**
    அ) தேனி ஆ) மதுரை
    இ) தஞ்சாவூர் ஈ) இராமநாதபுரம்

## பகுதி – II

குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **10x2=20**
ii) 28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

15. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?
16. இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட ராணுவ தளவாடங்கள் எவை?
17. வளத்தை வரையறுத்து அதன் வகைகளைக் குறிப்பிடுக.
18. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
19. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
20. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை தொகுத்து வழங்கவும்
21. இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கினை எழுதுக.
22. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?
23. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?
24. உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை என்றால் என்ன?
25. டீன்பிகா குறிப்பு வரைக.
26. இரண்டாம் துறை பற்றி சிறு குறிப்பு வரைக.
27. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?
28. இந்தியாவின் முக்கிய இயற்கையமைப்புப் பிரிவுகள் யாவை?

## பகுதி – III

குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **10x5=50**
ii) 42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
    1. ஐக்கிய நாடுகள் சபை தற்போது ........உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
    2. .............'உலகின் கூரை' என அழைக்கப்படுகிறது.
    3. நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி ...........ஆகும்.
    4. சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கைகள் .........ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
    5. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் .........
30. **அ) வேறுபடுத்துக.**
    i) புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்
    ii) வண்டல் மண் மற்றும் கரிசல் மண்
    **ஆ) காரணம் கூறுக.**
    இந்தியாவில் வெள்ளாடுகள் 'ஏழை மக்களின் பசு' என்று அழைக்கப்படுகிறது. ஏன்?
31. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை?
32. பன்னாட்டுச் சங்கத்தின் குறிக்கோள்கள் யாவை?
33. வெள்ளப்பெருக்கின் போதும், முன்னரும், பின்னரும் மேற்கொள் வேண்டிய அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளை எழுதுக.
34. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை?
35. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக்காட்டுக.
36. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
37. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38. இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.

AADHAVAA PUBLICATIONS 9092109966

For Orders Plz Contact : 90921 09966

39. இந்தியாவில் GDPயில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி
40. ஹோ சி மின் பற்றியும் வியட் மின் கட்சியின் உதயம் பற்றியும் குறிப்பு வரைக.

**குறிப்பு: பார்வை மாற்றுத் திறனாளி மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.**

41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1920 முதல் 1950 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
i. மீரட்
ii. சௌரிசௌரா
iii. சம்பரான்
iv. வேதாரண்யம்
v. தண்டி

## பகுதி – IV

குறிப்பு: இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x8=16**

43. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடுக.

(or)

i) சூயஸ் கால்வாய் சிக்கலைப் பற்றி நீவிர் அறிந்ததென்ன?
ii) தமிழ்நாட்டில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றி வளர்ந்ததை ஆய்வு செய்க.

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
1. கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
2. லட்சத்தீவுகள்
3. தமிழ்நாட்டில் உள்ள அனுமின் நிலையம்
4. அகஸ்தியமலை உயிர்க்கோள காப்பகம்
5. காபி விளையும் பகுதி
6. கே$^2$
7. இந்தியாவின் மின்னயல் தலைநகரம்
8. பாலைவனக் காடுகள்

(or)

**கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
1. வங்காள விரிகுடா
2. மேட்டூர் அணை
3. கொல்லிமலை
4. பாக் நீர்ச்சந்தி
5. கரிசல் மண் பகுதி
6. குறைந்த மக்கள்தொகை மாவட்டம்
7. உள்நாட்டு விமான நிலையம் ஒன்று
8. சென்னை to சேலம் இரயில் போக்குவரத்து

AADHAVAA PUBLICATIONS
www.Padasalai.Net
9092109966

For Orders Plz Contact : 90921 09966

AADHAVAA PUBLICATIONS
www.Padasalai.Net

For Orders Plz Contact : 90921 09966